# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டம்

---

[*2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 7 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*.]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011*, பெப்புருவரி மாதம் *11* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

## 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டம்

[2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 7 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 13/2010

**2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1**. இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2**. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :

"(இ) கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி;" அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "இச்சட்டத்திற்கான அட்டவணையின்" என்னும் சொற்களுக்கும் "உறுப்பினர்களின்" என்னும் சொற்களுக்கும் பதிலாக, முறையே "இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின்" என்னும் சொற்களையும் "உறுப்பினர்களின்" என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :-

"(ஆஆ) ஆட்களை நட்டம் சீராக்குநர்களாகப் பதிவு செய்தல்"; அத்துடன்

(2) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின் வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(ஈஈ) எவரேனும் உள்ளூர் அல்லது வெளிநாட்டு ஆளுடன் தகவலைப் பகிர்ந்துகொள்ளுதல் தொடர்பில் இருதரப்பு அல்லது பலதரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் எதனையும் செய்து கொள்ளுதல் ;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ஆ) இச்சட்டத்தின் பிரிவுகள் 14, 81, 83 அத்துடன் 89இ என்னும் பிரிவுகளின்கீழ் கட்டணங்களாக செலுத்தப்படவேண்டியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் :".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(1அ.) ஓராம் உட்பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சபை :-

(அ) இலங்கையில் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப் பட்ட ஆளொருவராகவும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதியாளரொருவராகவும்,

கருதப்படுதல் வேண்டும்.";

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "நீண்டகாலக் காப்புறுதித் தொழிலுக்கானதாக அல்லது பொது மற்றும் நீண்ட காலக் காப்புறுதித் தொழில் ஆகிய இரண்டிற்கு மானதாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நீண்ட காலக் காப்புறுதித் தொழிலுக்கானதாக" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அதன் (3) ஆம் உட்பிரிவில் "1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்புச் சபை தொடர்பிலும் 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தொடர்பிலும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்புச் சபை தொடர்பில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (ஆ) என்னும் பந்தியில் "விதித்துரைக்கப்பட்ட தொகைக்குக் குறையாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதன்பொருட்டு ஆக்கப்பட்ட விதிகளால், சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய தொகைக்குக் குறையாத" ; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :

"(ஆஆ) அதன் பணிப்பாளர் சபையில் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தகைமையீனங்களுக்கு அமைந்தவர்களாக அல்லாத ஆட்களைக் கொண்டிருந்தாலொழிய ;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (ஏ) என்னும் பந்தியில் "கூற்றொன்று ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூற்றொன்று ;" என்னும் சொல்லை இடுவதன்மூலமும் ;

(2) அதன் (ஐ) என்னும் பந்தியில் "தொழிற்திட்டமொன்று." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிற்திட்டமொன்று ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அதன் (ஐ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ஒ) சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு ஆவணங்களும் தகவலும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 15அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"காப்புறுதியாளர் உரிமம் பெற்ற பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றில் நிரற்படுத்தப்படுதல்.*

15அ. ஒவ்வொரு காப்புறுதியாளரும் இச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்று வழங்கப்பெற்ற ஓராண்டிற்குள் உரிமம்பெற்றதிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் உரிமம்பெற்ற பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றில் அதனை நிரற்படுத்திக்கொள்ளவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவை நீக்கம் செய்தல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் பந்தி (எ) என்பதில் "சபையால் விதிக்கப்பட்ட ஏதேனும் பணிப்பை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சபையால் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்பை அல்லது செய்யப்பட்ட தீர்மானத்தை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அதன் (ஏ) என்னும் பந்தியில், "அதன் பதிவுக்கான விண்ணப்பத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதன் பதிவுக்கான விண்ணப்பத்தில் அல்லது சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தகவலில் அல்லது ஆவணத்தில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28ஆம் பிரிவை நீக்கஞ்செய்தல்.*

**12**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவை உடன டுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

*"குறித்த சில சந்தர்ப்பங்களில் ஆளெவரும் காப்புறுதியாளர் ஒருவரின் பணிப் பாளர் ஒருவராக நியமிக்கப்படு தலோ அல்லது பணிப்பாளர் ஒருவராகத் தொடர்ந்திருத் தலோ ஆகாது.*

31அ. ஆளொருவர் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தகைமையிழப் புகளுக்கு அமைந்தவராயின் அத்தகைய ஆள் காப் புறுதியாளர் ஒருவரின் பணிப்பாளர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுதலோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுதலோ அல்லது பணிப்பாளர் ஒருவ ராகத் தொடர்ந்திருத்தலோ ஆகாது.".

**13**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(1அ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தகைமையீனங்கள் (1) ஆம் உட் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட அலுவலரொருவராக தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆளொருவருக்கும் மற்றும் அவர் தொடர்பிலும், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.".

**14**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் பிரிவுகள் 33அ, 33ஆ, 33இ, 33ஈ அத்துடன் 33உ என்றவாறு பயனுறுதலும் வேண்டும் :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 33அ, 33ஆ, 33இ, 33ஈ அத்துடன் 33உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

*"காப்புறுதியாளர் ஒருவர் பணிப் பாளர்களின் நியமனம் தொடர்பிலான நிபந்தனைகள்.*

33அ. (1) காப்புறுதியாளரின் பணிப்பாளர் அல்லது ஊழியர் இன்னுமொரு காப்புறுதியாள ரின் பணிப்பாளர் ஒருவராக அது முதலிற் குறிப் பிடப்பட்ட காப்புறுதியாளரின் துணைநிலைக் கம்பெனியொன்றாக அல்லது இணைக் கம்பெனி யொன்றாக இருக்குமிடத்துத் தவிர, நியமிக்கப் படுதலோ, தெரிவுசெய்யப்படுதலோ அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுதலோ ஆகாது.

*(2) காப்புறுதியாளர் ஒருவரின் ஊழியர் ஒருவர் அக்காப்புறுதியாளரின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படலாம், தேர்ந்தெடுக்கப்படலாம் அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படலாம். ஆயினும் பணிப்பாளர்களாக அவ்வாறு நியமிக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை அக்காப்புறுதியாளரின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் மூன்றிலொன்றை விஞ்சுதலாகாது என்ற நிபந்தனைக்கு அமைந்தோராதல் வேண்டும்.*

*காப்புறுதியாளர் பணிப்பாளர்களின் உத்தேச நியமனம் பெயர்குறித்த நியமனம் அல்லது தெரிவு பற்றி சபைக்கு அறிவித்தல்.*

*33ஆ. (1) காப்புறுதியாளர் காப்புறுதியாளரின் பணிப்பாளரொருவராக ஒவ்வொருவரும், தேர்ந்தெடுக்க, நியமிக்க அல்லது பெயர்குறித்து நியமிக்க விழையும் ஒவ்வோர் ஆளையும் பற்றிய தகவலை, விடயத்திற்கேற்ப, அத்தகைய நியமனத்தை, தேர்தலை அல்லது பெயர்குறித்த நியமனத்தைச் செய்யுமுன்னராக, சபையால் தீர்மானிக்கப்பட வேண்டிய அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும், அறிவித்தலொன்றை கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியிடம் கோப்பிடப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட படிவத்துடன் சேர்த்து சபைக்குச் சமர்ப்பித்து அதற்குச் சபையின் அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.*

*(2) காப்புறுதியாளர் ஒருவரின் பணிப்பாளர் ஒருவராக ஆளொருவரின் உத்தேச நியமனம், தேர்தல் அல்லது பெயர்குறித்த நியமனம் ஒன்றைப் பற்றி (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய காப்புறுதியாளரிடமிருந்து சபை அறிவித்தலொன்றைப் பெறுமிடத்து, சபை, அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற முப்பது நாட்களுக்குள், 33அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளையும் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தகைமையீனங்களையும் கருத்திற் கொண்டு, விடயத்திற்கேற்ப, நியமனத்தை, தேர்தலை அல்லது பெயர்குறித்த நியமனத்தை அங்கீகரித்தல் அல்லது அங்கீகரிக்க மறுத்தல் வேண்டும் என்பதுடன், அதன் முடிவைப்பற்றி, அம்முடிவுக்கு வருவதற்கான காரணத்துடன்*

சேர்த்து காப்புறுதியாளருக்கு அறிவித்தலும் வேண்டும். பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்பட, தேர்ந்தெடுக்கப்பட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட விழையும் சம்பந்தப்பட்ட ஆளுக்கு சபையின் முடிவைத் தெரிவிப்பதும் காப்புறுதியாளரின் கடமையாதல் வேண்டும்.

(3) சபையால் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட முடிபொன்றினால் இடருற்ற எவரேனுமாள், அத்தகைய முடிபுக்கெதிராக சபைக்கு மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிக்கலாம். அத்தகைய மேன்முறையீடு, காப்புறுதி, நிதி முகாமைத்துவம் அல்லது சட்டத்துறையில் அனுபவம்கொண்டுள்ளவர்களும் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளவர்களுமான ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் நியமிக்கப்பட்ட மூன்று ஆட்கள் அடங்கிய மீளாய்வுக் குழாமொன்றுக்குச் சபையால் ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும். மீளாய்வுக் குழாம் எந்த ஏதுக்களின்மீது மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்களையும் அதன் அபிப்பிராயத்தின்படி பரிசீலனை செய்யப்படுவதற்குத் தகுதியான வேறேதேனும் கருமங்களையும் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட காப்புறுதியாளரின் பணிப்பாளர் ஒருவராக, விடயத்திற்கேற்ப, அத்தகைய ஆளின் நியமனத்தின், தெரிவின் அல்லது பெயர்குறித்த நியமனத்தின் மறுப்பை ஒன்றில் உறுப்படுத்தி அன்றேல் அங்கீகரித்து முடிபொன்றை எடுத்தல் வேண்டும்.

*காப்புறுதியாளர் ஒருவரின் பணிப்பாளர்களின் நியமனங்கள், தெரிவுகள் அல்லது பெயர்குறித்த நியமனங்கள் சபையினால் அங்கீகரிக்கப்படல்.*

33இ. (1) காப்புறுதியாளர் ஒருவர், சட்டத்தின் 33ஆ என்னும் பிரிவின்கீழ் எந்த ஆளின் நியமனம், தேர்தல் அல்லது பெயர்குறித்த நியமனம் சபையால் அங்கீகரிக்கப்படாதிருக்கின்றதோ அந்த ஆளொருவரை அத்தகைய காப்புறுதியாளரின் பணிப்பாளர் ஒருவராக நியமித்தலோ, தேர்ந்தெடுத்தலோ அல்லது பெயர்குறித்து நியமித்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் 33ஆ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அங்கீகாரத்திற்கென எந்த ஆளின் பெயர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த

ஆள் சபையின் முடிவு கிடைக்கப் பெறாதிருக்கையில் காப்புறுதியாளர் ஒருவரின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படலாம், தெரிவு செய்யப்படலாம் அல்லது பெயர்குறித்து நியமிக்கலாம். ஆயினும், சபை அங்கீகாரமளிக்க மறுக்குமிடத்தும் அத்துடன் காப்புறுதியாளர் சபையின் முடிபை சம்பந்தப்பட்ட ஆளுக்கு தெரிவிக்குமிடத்தும் அத்தகைய ஆள் அத்தகைய தொடர்பாடலின் தேதியிலிருந்து அங்கீகாரமளிக்க மறுக்கின்ற சபையின் முடிவிற்கு எதிராக 33ஆ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் சம்பந்தப்பட்ட ஆளினால் முன்வைக்கப்பட்டிருக்கக்கூடிய எவையேனும் ஆட்சேபனைகள் மீது சபை எடுத்திருக்கக்கூடிய ஏதேனும் முடிவிற்கமைவாக, காப்புறுதியாளரின் பணிப்பாளர் ஒருவராகப் பதவிதாங்காதொழிதல் வேண்டும்.

(3) எந்தப் பணிப்பாளர் ஒருவரின் நியமனம், தேர்தல் அல்லது பெயர்குறித்த நியமனம் சபையால் அங்கீகரிக்கப்பட்டதோ அந்தப் பணிப்பாளர் ஒருவரின் நியமனம், தெரிவு அல்லது பெயர்குறித்த நியமனம் ஒவ்வொன்றையும் பற்றி உடனடியாக சபைக்கு அறிவிப்பது காப்புறுதியாளர் ஒருவரின் கடமையாதல் வேண்டும்.

பணிப்பாளர் ஒருவராகப் பதவிதாங்குவதற்குத் தகைமையற்ற பணிப்பாளர் ஒருவரை அகற்றுதல்.

33ஈ. (1) காப்புறுதியாளர் ஒருவர், அத்தகைய காப்புறுதியாளரின் பணிப்பாளர் ஒருவர் இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தகைமையீனத்திற்கு அமைந்தவராகியுள்ளார் என அல்லது காப்புறுதியாளரின் பணிப்பாளர் ஒருவராகத் தொடர்ந்து பதவிதாங்குவதற்கு தகைமையற்றவராகியுள்ளார் என அறிந்துகொண்டதன்மீது, அத்தகைய நிகழ்வை உடனடியாக சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) சபை அத்தகைய காப்புறுதியாளரின் பணிப்பாளர் ஒருவரைப் பற்றி (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தகவலைப் பெறுமிடத்து அல்லது

காப்புறுதியாளர் ஒருவரின் பணிப்பாள ரொருவராக நியமிக்கப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளொரு வர் அதன்பின்னர் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஒன்றோ அல்லது அதற்கு மேற்படவோவான தகைமை யீனங்களுக்கு ஆளாகியுள்ளார் என அல்லது வேறு வகையில் காப்புறுதியாளர் ஒருவரின் பணிப்பாளர் ஒருவராகத் தொடர்ந்து பதவிதாங்கத் தகுதியற்ற வராகியுள்ளாரென சபை ஏதேனும் நேரத்தில் அறியவருமிடத்து சபையானது -

(அ) பணிப்பில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்குள் பணிப்பாளர் ஒருவரின் பதவியிலிருந்து அத்தகைய ஆளை அகற்றுமாறு சம்பந்தப் பட்ட காப்புறுதியாளரை எழுத்தில் பணித் தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) எந்த ஆள் அகற்றப்படவேண்டுமோ அந்த ஆளுக்கு அத்தகைய அகற்றுகைபற்றி, அது தொடர்பாக காப்புறுதியாளருக்கு வழங்கப் பட்ட பணிப்பின் பிரதியொன்றுடன் இணைத்து எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பணிப்பொன்று வழங்கப்பட்ட காப்புறுதியாளர், பணிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் -

(அ) பணிப்பாளரின் பதவியிலிருந்து அவ்வாளை அகற்றுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய அகற்றுகையைப் பற்றி காப்புறுதியாளரின் பங்குதாரர்களுக் கும் கம்பெனிகள் பதிவாளர் தலைமை யதிபதிக்கும் அறிவிப்பதற்கு அவசிய மாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட பணிப்பிற்கிணங்க பணிப்பாளர் ஒருவரின் அகற்றுதலானது, காப்புறுதியாளரின் அமைப்பு அகவிதிகள் எவ்வாறிருப்பினும், காப்புறுதியாளரால் அனுப்பப்பட்ட அப்புறப்படுத்துதல் பற்றிய அறிவிப்பு பணிப்பாளரால் பெறப்பட்ட தேதியிலிருந்து பயனுறுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் ஒருவரின் பதவியிலிருந்து எவரேனும் ஆளின் அகற்றுகையினால் இடருறும் அத்தகைய ஆள் அத்தகைய அகற்றுகை பற்றி அறிவிக்கப்பட்டுப் பதினான்கு நாட்களுள் அதினின்று மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம். மேன்முறையீட்டு நீதிமன்றம் இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீட்டின்மீது எந்த முடிவுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த முடிவை உறுதிப்படுத்தலாம், மீளாய்வு செய்யலாம், திரிபுபடுத்தலாம் அல்லது தள்ளுபடிசெய்யலாம் என்பதுடன், நீதியின் நலன்கள் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய கட்டளையையும் ஆக்கலாம்.

இணங்கியொழுகத் தவறுகை தவறொன்றாதல்.

33உ. பிரிவு 33ஈ என்பதன் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலத்துள் இணங்கியொழுகத் தவறுகின்ற காப்புறுதியாளர் ஒருவரும், அத்துடன் அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப் பெற்றவரும் அதன்பின்னர் பணிப்பாளர் ஒருவராகத் தொடர்ந்து பணியாற்றுபவருமான பணிப்பாளர் ஒருவரும் இச் சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விசாரணையின் பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும் என்பதுடன், மேலதிகமாக-

(அ) காப்புறுதியாளரின் விடயத்தில், குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன் பின்னர் காப்புறுதி யாளர் அத்தகைய தவறைத் தொடர்ந்து புரியும் நாள் ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபாவைக்கொண்ட மேலுமொரு குற்றப்பணத்திற்கும் ; அத்துடன்

(ஆ) காப்புறுதியாளரின் பணிப்பாளர் ஒருவரின் விடயத்தில், குற்றத்தீர்ப்பளிக் கப்பட்ட பின்னர் அத்தகைய பணிப்பாளர் பணிப்பாளர் ஒருவராகத் தொடர்ந்து பணியாற்றும் நாள் ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபாவைக் கொண்ட மேலும் ஒரு குற்றப்பணத்திற்கு,

ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 35ஆம் பிரிவை நீக்கஞ்செய்தல்.

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு, அப்பிரிவிற் கான உட்பிரிவு (1)ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப் படுகின்றது:-

"(1) காப்புறுதியாளர் ஒவ்வொருவரும், காப்புறுதிப் பத்திரங்களை வைத்திருப்பவர்களின் நலன்கள் போதியளவு பாதுகாக்கப்படுகின்றனவா எனப் பரிசீலனை செய்யும் நோக்கத்திற்காக :-

(அ) அத்தகைய காப்புறுதியாளரால் வழங்கப்பட வுள்ள எல்லாக் காப்புறுதிப்பத்திரங்களையும் அவை வழங்கப்படுவதற்கு முன்னர் ;

(ஆ) ஏலவே வழங்கப்பட்டுள்ள எவையேனும் காப்புறுதிப் பத்திரங்களுக்குச் செய்யப்பட வுள்ள எவையேனும்திருத்தங்களை ; அத்துடன்

(இ) அவ்வாறு செய்யுமாறு எழுத்திலான அறிவித் தலின் மூலம் தேவைப்படுத்தப்படுமிடத்து, ஏலவே வழங்கப்பட்டுள்ள எவையேனும் காப்புறுதிப்பத்திரங்களின் பிரதிகளை,

சபையில் கோப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அதன்சார்பில் ஆக்கப்படும் விதிகளின்மூலம் சபையினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சபையால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் "அதன்சார்பில் சபையினால் ஆக்கப்படும் விதிகளினால் தேவைப் படுத்தப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சபையினால் தேவைப்படுத்தப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "சபை தீர்மானிக்கக்கூடியவாறாக" என்னும் சொற்களிலிருந்து "ஆக்கப்படும் விதிகளுக்கிணங்கப்" என்பது வரையிலான சொற்களுக்குப் பதிலாக "நிதியாண்டு முடிந்த பின்னர் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதியினுள் அத்தகைய முறையில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவில் அப் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அதன்சார்பில் ஆக்கப்படும் விதிகளின்மூலம் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொண்டுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்த கைய தகவலையும் தகவல் எந்தக் காலப்பகுதிக்குள் சமர்ப்பிக் கப்பட வேண்டுமோ அந்தக் காலப்பகுதியையும் கொண்டுள்ள" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவு "1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 162 ஆம் பிரிவின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 173 ஆம் பிரிவின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவு "அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகளினால் சபைமூலம் தீர்மானிக் கப்படக்கூடியவாறான அத்தகைய விபரத்திரட்டுக்களை அல்லது பொழிப்புக்களை அல்லது திருத்தப்பட்ட பதிலீடாக விபரத் திரட்டுகளை அல்லது பொழிப்புகளை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மேலதிக விபரத்திரட்டுகளை அல்லது பொழிப்புகளை அல்லது திருத்தப்பட்ட அல்லது பதிலீடாக விபரத்திரட்டுகளை அல்லது பொழிப்புகளை சபை தீர்மானிக்கக்கூடிய அத்தகைய காலப் பகுதிக்குள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு அப்பிரிவுக் கான காப்புவாசகத்தில் "காப்புறுதியாளருக்குச் சந்தர்ப்ப மொன்று வழங்கப்பட்டிருந்தாலொழிய எவரேனும் குறிப்பிட்ட காப்புறுதியாளரைப்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "காப் புறுதியாளருக்கு அல்லது தரகருக்குச் சந்தர்ப்பமொன்று வழங்கப் பட்டிருந்தாலொழிய எவரேனும் குறிப்பிட்ட காப்புறுதியாளரை அல்லது தரகரைப்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு நீக்கஞ் செய் யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விபரத் திரட்டுகளை வெளியிடுதல்.*

61. காப்புறுதியாளர் ஒருவர் இச்சட்டத்தின்கீழ் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விபரத் திரட்டை அல்லது அத்தகைய விபரத்திரட்டின் உண்மையானதும் அச்சொட்டானதுமான பொழிப்பொன்றை பிரசித்தப்படுத்தும் நோக்கத் திற்காக சபையின் எழுத்திலான முன்னங்கீகாரத் துடன் வெளியிடலாம்."

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "தனி ஆளொரு வரை" அத்துடன் "எல்லாத் தனி ஆட்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "எவரேனும் ஆளை" அத்துடன் "எல்லா ஆட்களையும்" என்னும் சொற் களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "ஆளெவரையும்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "எவரேனும் ஆளை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**25**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில். "காப்புறுப்பத்திரம் ஒன்றை அல்லது பத்திரங்களை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "காப்புறுதிப்பத்திரங்களை" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில், "குறித் துரைக்கப்பட்ட அலுவலர் ;" என்னும் சொற் களுக்குப் பதிலாக, "முதன்மை அலுவலர்; " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பந்தியின் (ii) ஆம் பந்தியில், "இணை அல்லது துணைநிலைக் கம்பெனியொன்றின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இணை அல்லது துணைநிலை அல்லது கொளீ கம்பெனியொன்றின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**26**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில், "80 ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தி யின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "80 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில், "வழங்கப்பட்ட தொழில்சார் நட்டோத்தரவாத காப்புறுதிப் பத்திரத் தின் அல்லது பத்திரங்களின் அத்தாட்சிப்படுத்தப் பட்ட ஒரு பிரதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வழங்கப்பட்ட உயர்தொழில்சார் நட்டோத்தரவாத காப்புறுதிப் பத்திரங்கள் ஒவ்வொன்றினதும்

*அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி ;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**27**. முதன்மைச் சட்டவாக்கத்தின் *83* ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) ''அதன் சார்பில் சபைக்கு விண்ணப்பமொன்று செய்யப்பட்டதன்மேல்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அதன் சார்பில் சபைக்கு விண்ணப்ப மொன்று செய்யப்பட்டதன்மேல் அதன் பதிவு முடிவுறும் தேதிக்கு முன்னர் மூன்று மாதங்களுக்கு மேற்படாமல் ஆனால் இரண்டு மாதங்களுக்குக் குறை யாமல்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத் திலும் அத்தகைய தொகைக்கும் உயர்தொழில்சார் காப்புறுதி நட்டோத்தரவாதப்பத்திரமொன்று'' என் னும் சொற்களுக்குப் பதிலாக, ''சபையினால் தீர்மானிக் கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய தொகைக்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காப்புறுதியாளர்களால் வழங்கப்பட்ட தொழில்சார் காப்புறுதி நட்டோத்தரவாதப்பத்திரம் ஒவ்வொன்றினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி யொன்று ;'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் ''அத்தகைய வேறு ஆவணங்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அத்தகைய வேறு ஆவணங்களும் தகவலும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**28**. முதன்மைச் சட்டவாக்கத்தின் *84* ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை பதிலீடுசெய்வதன்மூலமும் :-

''(ஆ) தரகர் இச்சட்டத்தின்கீழ் சபையால் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்பு களுடன் இணங்கியொழுகத் தவறி யுள்ளவிடத்து அல்லது அவற்றிற்கு முரணாக செயற்பட்டிருக்குமிடத்து ;'';

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்.

"(ஆஆ) தரகர் சீரான நிதிநிலைமை யில் இல்லாதொழிந்துள்ள விடத்து ;";

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை பதிலீசெய்வதன்மூலமும் :-

"(இ) (i) தரகரின் பணிப்பாளர் ஒருவர் அல்லது முதன்மை அலுவலர் ; அல்லது

(ii) அத்தகைய தரகரின் இணை, துணை நிலை அல்லது கொளீ கம்பெனியொன்றின் பணிப்பாளர் ஒருவர் அல்லது பிரதம நிறைவேற்று அலுவலர்,

காப்புறுதியாளர் ஒருவரின் பணிப்பாளர் ஒருவராக, பங்குதாரர் ஒருவராக அல்லது ஊழியர் ஒருவராக வருமிடத்து ;

(ஈ) அவ்வுட்பந்தியின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(இஇ) தரகர் எவரேனும் காப்புறுதியாளரின் பங்குதாரர் ஒருவராகுமிடத்து;

(இஇஇ) தரகர் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது இச்சட்டத்தின்கீழ் சபையால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது விதியை அல்லது சுமத்தப்பட்ட ஏதேனும் நிபந்தனையை மீறியுள்ளவிடத்து;"; அத்துடன்

(உ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை நீக்கி விட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :-

"(உ) தரகர் விடயத்திற்கேற்ப பதிவுக்கான அல்லது பதிவின் புதுப்பித்தலுக்கான விண்ணப்பத்தில் அல்லது சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் கூற்றில் அல்லது ஆவணத்தில் பொய்யான, பிறழ்வழி இட்டுச்செல்கின்ற அல்லது செவ்வை யற்ற தகவலைக் கொடுத்துதவியுள்ளவிடத்து அல்லது முக்கியமாக நிகழ்வுகளை மூடி மறைந்துள்ளவிடத்து அல்லது வெளிவிடத் தவறியுள்ளவிடத்து."; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் :-

"(1அ) இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் உட்பிரிவுகள் (2), (3), (4), (5), (6) அத்துடன் (7) என்பவற்றின் ஏற்பாடுகள், இப்பிரிவின்கீழான பதிவொன் றின் இல்லாதொழிகைக்கும் அல்லது இடை நிறுத்துகைக்கும் மற்றும் அது தொடர்பிலும், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்."; அத்துடன்

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஏற்புடையன வாதலும் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாத லும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என் பதுடன், அது அச் சட்டவாக்கத்தின் 84அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 84அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

"84 ஆம் பிரிவின்கீழ் செயற்படுவதற்குப் பதிலாக சபை குறித்த சில வழிமுறைகளைப் பணிக்கலாம்.

**84அ.** பிரிவு 84 என்பதன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் சபையானது அங்கு குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஏதுக்களின்மீது ஏதேனும் நடவடிக்கையை எடுப்பதற்குப் பதிலாக அத்துடன் செயலின் அல்லது செய்யாமையின் இயல்பு அப்பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதனைத் தேவைப்படுத்தும்வகையில் அவ்வளவு பாரதூரமானதாக அல்லாதவிடத்தும்–

(அ) அத்தகைய செயலின் அல்லது செய்யாமையினின்றெழும் ஏதேனும் விளைவைச் சீராக்குவதற்கும் செவ்வைப்படுத்துவதற்கும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதிகளுடன் அல்லது விதியுடன் அல்லது இச்சட்டத்தின்கீழ் சபையால் சுமத்தப்பட்ட எவையேனும் நிபந்தனைகளுடன் அல்லது வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுடன் இணங்கியொழுகுவதற்கு,

தோதானதென சபை கருதக்கூடியவாறான, அத்தகைய வழிமுறைகளை எடுக்குமாறு தரகரைப் பணிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட காப்புறுதியாளர்களுடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காப்புறுதியாளர்களுடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிலும் அவ்வுட்பிரிவிற்கான காப்புவாசகத்தில் "அத்தகைய காப்புறுதிப் பத்திரமானது" என்னும் சொற்களுக்கும், "காப்புறுதிப் பத்திரம்" என்னும் சொல்லுக்கும் பதிலாக முறையே, "அத்தகைய காப்புறுதிப்பத்திரங்கள்" என்னும் சொற்களையும் "காப்புறுதிப்பத்திரங்கள்" என்னும் சொல்லையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் -

(அ) "பெறப்பட்ட காப்புறுதிப்பத்திரம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பெறப்பட்ட காப்புறுதிப்பத்திரங்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் "ஒன்றில்" என்னும் சொல்லை நீக்கிவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "பணத்தொகையொன்றில்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பணத்தொகையொன்றில், எது கூடுதலானதோ அதில்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(3) தரகர் ஒவ்வொருவரும் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகவல் அடங்கிய விபரத்திரட்டுகளை அத்தகைய காலப்பகுதிக்குள் சபைக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்." ; அத்துடன்

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(6) தரகர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் 83 ஆம் பிரிவால் தேவைப்படுத்தப்பட்டவாறு இரண்டு

அல்லது அதற்கு மேற்பட்ட காப்புறுதியாளர்களால் வழங்கப்பட்ட தொழில்சார் நட்டோத்தரவாத காப்புறுதிப்பத்திரங்கள் ஒவ்வொன்றினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை ஆண்டுதோறும் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவு "காப்புறுதியாளர் ஒருவரினால் தரகருக்கு அல்லது காப்புறுதி முகவருக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, காப்புறுதியாளர் ஒருவரினால் ஒரு தரகருக்கு அல்லது ஒரு காப்புறுதி முகவருக்கு அல்லது ஒரு தரகரினால் ஒரு காப்புறுதி முகவருக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் பாகம் VIIIஅ என்பதனை உட்புகுத்துதல்.*

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் பாகம் VIIIஅ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

## "பாகம் VIIIஅ

### நட்டம் சீராக்குநர்களைப் பதிவு செய்தல்

*பதிவுச் சான்றிதழொன்றில்லாமல் நட்டம் சீராக்குநர் ஒருவராகச் செயற்படுவதற்கெதிரான தடை.*

89அ. (1) ஆளெவரும் நட்டம் சீராக்குநர் ஒருவராக இச்சட்டத்தின்கீழ் சபையால் அளிக்கப்பட்ட பதிவுச்சான்றிதழொன்றைக் கொண்டிருப்பவராக இருந்தாலன்றி அத்தகைய ஆள் காப்புறுதியாளர் எவருக்கும் நட்டம் சீராக்குநர் ஒருவராக செயற்படுதலோ அல்லது தொடர்ந்திருத்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இலங்கையில் வதிவுள்ளவராக அல்லாதவரும் அத்தகைய ஆள் எந்த நாட்டில் வதிவுள்ளவராக இருக்கின்றாரோ அந்த நாட்டில் இயைபான அதிகாரியிடமிருந்து நட்டம் சீராக்குநர் ஒருவராக அவசியமான சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுள்ளவருமான ஆளொருவர் இலங்கையினுள் நட்டம்

*சீராக்குநர் ஒருவராகப் பணியாற்றுவதற்கு அத்தகைய பணி இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நட்டம் சீராக்குநர் ஒருவராக முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையிலிருக்கும் ஆளொரு வருடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.*

*பதிவுக்கான தகைமை.*

*89ஆ. ஆளெவரும், பதிவுசெய்தல் சார்பாகச் சபையால் ஆக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக் கப்பட்டவாறான அத்தகைய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டிருந்தாலன்றி அத்த கைய ஆள் இச்சட்டத்தின்கீழ் நட்டம் சீராக்குநர் ஒருவராகப் பதிவுசெய்யப்படுவதற்குத் தகுதியுடைய வராதலாகாது.*

*பதிவுக்கான விண்ணப்பமும் சான்றிதழ் வழங்குதலும்.*

*89இ. (1) நட்டம் சீராக்குநர் ஒருவராகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பமொன்று சபையால் அந்நோக்கத்திற்கென வழங்கப்படவேண்டிய வாறான அத்தகைய படிவத்தில் சபைக்குச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் சார்பில் சபையால் தீர்மானிக்கப்படவேண்டிய வாறான அத்தகைய ஆவணங்கள் தகவல்கள் அத்துடன் அத்தகைய கட்டணத்துடனும் சேர்த் தனுப்பப்படுதல் வேண்டும்.*

*(2) சபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண் ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மீது, அதன் கண் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களைக் கருத்திற் கொண்டு, அவசியமானதென அது கருதுமிடத்து தம்பக்க கருத்தை எடுத்துரைக்கும் வாய்ப் பொன்றை விண்ணப்பகாரருக்கு அளித்த பின்னர், விண்ணப்பகாரர் நட்டம் சீராக்குநர் ஒருவராகப் பதிவுசெய்யப்படுவதற்குத் தகுதியுடையவரா அல்லரா என விண்ணப்பகாரருக்கு எழுத்திலான அறிவித்தல் மூலம் தெரிவித்தல் வேண்டும். ஆளெ வரும் நட்டம் சீராக்குநர் ஒருவராகப் பதிவு செய்யப் பட்டதன்மீது அத்தகைய ஆளுக்கு பதிவுச் சான்றிதழ் ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்த கைய நியதிநிபந்தனைகளுக்கு அமைந்ததாதலும் வேண்டும்.*

(3) சபையால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழொன்று அதனை வைத்திருப்பவருக்கு அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய செயற்பாட்டைக் கொண்டு நடாத்துவதற்கு அதிகாரமளித்தல் வேண்டும் என்பதுடன், வழங்கப்பட்ட சான்றிதழொன்று வேறு எவரேனும் ஆளுக்குக் கைமாற்றப்படுதலோ அன்றேல் வேறு எவரேனும் ஆளின் நலனுக்குப் பயன்படுத்தப்படுதலோ ஆகாது.

(4) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக பதிவுச் சான்றிதழொன்று அதனை வைத்திருப்பவரால் கைமாற்றப்படுதல் அல்லது பயன்படுத்தப்படுதல் எதுவும் வெற்றும் வறிதுமாதல் வேண்டும் என்பதுடன், உடனடியாகப் பயனுறும் வகையில் அத்தகைய பதிவை இல்லாதொழிக்கும் தத்துவம் சபைக்கு இருத்தலும் வேண்டும்.

(5) சபையானது, நட்டம் சீராக்குநர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழில் உள்ள ஏதேனும் நியதி அல்லது நிபந்தனைக்கு ஏதேனும் நேரத்தில் சேர்ப்புகளைச் செய்யலாம். அதனை வேறுபடுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம் அல்லது அதற்குப் புதிய நியதிகள் அல்லது நிபந்தனைகளை சேர்த்துக்கொள்ளலாம்.

பதிவை இல்லா தொழித்தல்.

89ஈ. (1) நட்டம் சீராக்குநர் ஒருவர் –

(அ) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏதேனும் ஏற்பாட்டிற்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் விதிகளுக்கு அல்லது ஒழுங்குவிதிகளுக்கு முரணாகச் செயற்பட்டுள்ளாரென ;

(ஆ) சபையால் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை மீறிச் செயற்பட்டுள்ளாரென ;

(இ) அத்தகைய நட்டம் சீராக்குநரால் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தில், கணக்கில் எழுத்திலான தகவலில் அல்லது ஆவணத்தில் பொய்யானதாக, செம்மையற்றதாக அல்லது பிறழ்வழி இட்டுச் செல்வதாகப் பின்னர் காணப்பட்ட ஏதேனும் கூற்றைச் செய்துள்ளார் அல்லது நட்டம் சீராக்குநராகவான அவரின் பொருத்தமாந்தன்மையை மதிப்பிடுவதில் சபையின் முடிவைப் பாதித்திருக்கக்கூடிய முக்கியமான நிகழ்வுகள் சிலவற்றை நட்டம் சீராக்குநர் மறைத்துள்ளார் அல்லது வெளிவிடத் தவறியுள்ளார் என்பது கண்டுபிடிக்கப்பட்டதென ; அல்லது

(ஈ) பதிவுச்சான்றிதழ் வழங்கப்பட்டதிலிருந்து அத்தகைய பதிவை வழங்கப்பெறுவதற்கு ஆன தகைமையிழந்தவராகக் காணப்பட்டுள்ளார் என,

சபை திருப்தியுறுமிடத்து, சபையானது அத்தகைய நட்டம் சீராக்குநருக்கு வழங்கப்பட்ட ஒரு பதிவுச்சான்றிதழை இல்லாதொழிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையின் முடிவினால் இடருற்ற நட்டச் சீராக்குநர் ஒருவர் அதினின்று மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அத்தகைய மேன்முறையீடு ஒன்றிற்கும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

*நிராகரிப்பொன்றிற்கு முன்னர் சபை காரணம்காட்டுவதற்கான வாய்ப்பொன்றை வழங்குதல்.*

*89உ.* (1) நட்டம் சீராக்குநர் ஒருவராகப் பதிவு செய்யப்படுவதற்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று ஏன் நிராகரிக்கப்படக்கூடாது என்பதற்கான காரணத்தை அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய காலப்பகுதிக்குள் காண்பிப்பதற்கு விண்ணப்பகாரருக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுக்கப்படாமல் அத்தகைய விண்ணப்பம் நிராகரிக்கப்படுதலாகாது.

(2) பதிவிற்கான விண்ணப்பகாரர் ஒருவர் -

(அ) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் காரணம் காட்டத் தவறுமிடத்து ; அல்லது

(ஆ) சபையால் ஏற்றக்கொள்ளத்தக்க போதியளவு காரணம்காட்டத் தவறுமிடத்து,

செய்யப்பட்ட விண்ணப்பம் சபையால் நிராகரிக்கப்படுதல் வேண்டும்".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**34**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவு, "கம்பெனி" என்னும் சொல் அப்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம், அத்தகைய சொல்லுக்குப் பதிலாக "ஆள்" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 92அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துதல்.*

**35**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 92அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"முறையாகப் பதிவுசெய்யப்படாமல் நட்டம் சீராக்குநர் ஒருவராகப் பணியைக் கொண்டு நடாத்துதல் தவறொன்றாதல்.*

*92அ.* இச்சட்டத்தின்கீழ் முறையாகப் பதிவு செய்யப்படாமல் நட்டம் சீராக்குநர் ஒருவராகச் செயற்படுகின்ற அல்லது காட்டிநிற்கின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டிற்குக் குறையாத மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**36.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவு "இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதிக்கு, விதிக்கு அல்லது கட்டளைக்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் சபையால் விதிக்கப்பட்ட எவையேனும் நிபந்தனைகளுக்கு அல்லது செய்யப்பட்ட எவையேனும் தீர்மானங்களுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**37.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பிரதான அலுவலகத்தின் பிரதான அலுவலராக நியமித்தலும் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சபையின் அங்கீகாரத்துடன் அதன் பிரதான அலுவலராக நியமித்தலும் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(1அ) இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட தகைமையீனங்கள், (1) ஆம் உட்பிரிவின்கீழ் பிரதான அலுவலரொருவராகத் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆளொருவருக்கு ஏற்புடையற்பாலனவான தகைமையீனங்களுக்கும் அவை தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 94அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**38.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 94அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

"பதிவுசெய்வதற்காக விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களின் திருத்தம் பற்றி சபைக்கு அறிவிக்கப்படல்.

94அ. பதிவு செய்யப்பட்ட பின்னர், விடயத்திற்கேற்ப ஒரு காப்பறுதியாளராக, தரகராக அல்லது நட்டம் சீராக்குநராக பதிவு செய்யப்படுவதற்கென பிரிவு 14, பிரிவு 81 அல்லது பிரிவு 89இ என்பதன்கீழ் ஆளொருவரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றில் அடங்கியுள்ள தகவலில்

அல்லது விபரங்களில் ஏதேனும் திருத்தம் அல்லது மாற்றமொன்று செய்யப்படுமிடத்து, அத்தகைய திருத்தம் அல்லது மாற்றம் தொடர்பிலான முழு மையான சான்றுறுதி செய்யப்பட்ட கூற்றொன்றை சபைக்குக் கொடுத்துதவுவது விடயத்திற்கேற்ப அத்தகைய, காப்புறுதியாளரின், தரகரின் அல்லது நட்டம் சீராக்குநரின் கடமையாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 95அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துதல்.

**39.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 95 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது என்பதுடன், அது அச் சட்டவாக்கத்தின் 95அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறு தலும் வேண்டும்.

"சபை செலுத் தப்பட்ட பங்கு மூலதனத்தின் அதிகரிப்பை தேவைப் படுத்துதல்.

95அ. சபையானது காப்புறுதியாளர்களினதும் தரகர்களினதும் செலுத்தப்பட்ட பங்குமூலதனம் அதிகரிக்கப்பட வேண்டும் என அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகளினால் தேவைப்படுத்துவதற் கான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவது விடயத்திற்கேற்ப அத்தகைய எல்லா காப்புறுதியாளர்களினதும் தரகர்களி னதும் கடமையாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 96அ மற்றும் 96ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**40.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 96 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் பிரிவு 96அ அத்துடன் பிரிவு 96ஆ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

"சபை பணிப்புகளை வழங்குதல்.

96அ. சபை, காப்புறுதிப்பத்திரம் வைத்திருப் பவர்களினதும் வாய்ப்புள்ள காப்புறுதிப்பத்திரம் வாய்ப்புநோக்கு காப்புறுதிப்பத்திரகாரர்களி னதும் நலன்களைப் பாதுகாக்கும் கருத்தோடு, விடயத்துக்கேற்ப, காப்புறுதியாளர்களுக்கும், தரகர் களுக்கும் அத்துடன் நட்டம் சீராக்குநர்களுக்கும் பணிப்புகளை வழங்கலாம் என்பதுடன், அவ்வாறு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைகளுடன் இணங்கியொழுகுதல், விடயத்திற்கேற்ப, அத்தகைய ஒவ்வொரு காப்புறுதியாளரினதும் தரகரினதும் நட்டம் சீராக்குநரினதும் கடமை யாதலும் வேண்டும்.

*செய்யப்பட்ட தீர்மானம் உடனடியாக தெரிவிக்கப்படல்.*

96ஆ. அதன்சார்பில் ஆக்கப்பட்ட விதிகளினால், செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படாததும் விடயத்திற்கேற்ப காப்புறுதியாளர்கள், தரகர்கள் அல்லது நட்டம் சீராக்குநர்கள் தொடர்பிலான சபையின் தீர்மானம் எதுவும் அத்தகைய தீர்மானம் செய்யப்பட்டதன் மீது உடனடியாக, விடயத்திற்கேற்ப, எந்தக் காப்புறுதியாளர்கள், தரகர்கள் அல்லது நட்டம் சீராக்குநர்கள் தொடர்பிலானதோ அந்த எல்லாக் காப்புறுதியாளர்களுக்கும், தரகர்களுக்கும் அல்லது நட்டம் சீராக்குநர்களுக்கும் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 97 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**41.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 97 ஆம் பிரிவு "எவரேனும் காப்புறுதியாளர்களுக்குச் சேர்ப்பிக்கப்படல் வேண்டுமென" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவரேனும் காப்புறுதியாளருக்கு அல்லது தரகருக்குச் சேர்ப்பிக்கப்பட வேண்டுமென" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 98 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**42.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 98 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "எந்த நீண்டகால காப்புறுதித் தொழிலின்" என்னும் சொற்களுக்கும் அத்துடன் "அந்த நீண்டகாலத் தொழிலின் என்னும் சொற்களுக்கும் பதிலாக முறையே "எந்த நீண்டகால காப்புறுதித்தொழிலின் அல்லது பொதுக் காப்புறுதித் தொழிலின்" என்னும் சொற்களையும் "அந்த நீண்டகாலக் காப்புறுதித் தொழிலின் அல்லது பொதுக் காப்புறுதித் தொழிலின்" என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவிற்கான ஓரக் குறிப்பில் "நீண்டகால காப்புறுதித் தொழில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நீண்டகால அல்லது பொதுக் காப்புறுதித் தொழில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 99 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**43.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 99 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (3) உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் "அழைப்பு விடுக்கும் ஓர் ஆவணம் எனப் பொருள்படும்" என்னும் சொற்களுக்கும் "தகவல் அடங்கிய ஏதேனும் ஆவணத்தையும் உள்ளடக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "அழைப்பு விடுக்கும் ஏதேனும் இலத்திரனியல் வழிமுறை உட்பட ஏதேனும் ஊடகத்தில் காணப்படும் ஓர் அழைப்பு எனப் பொருள்படும்" சொற்களையும் "ஏதேனும் தகவலையும் உள்ளடக்கும்." என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**44.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவு நீக்கஞ்செய்யப் பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*"எந்தத் தொழில்களுக்கு உரிமம் அல்லது பதிவொன்று வழங்கப்படுகின்றதோ அந்தத் தொழில்களைத் தவிர்ந்த வேறு தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கெதிரான தடை.*

100. காப்புறுதியாளர் அல்லது தரகர் எவரும் காப்புறுதியாளர் ஒருவரின் விடயத்தில், குறித்துரைக்கப்பட்ட வகுப்பை அல்லது உப வகுப்பைச் சேர்ந்த காப்புறுதித் தொழிலைத் தவிர்ந்த அல்லது தரகர் ஒருவரின் விடயத்தில் எந்த வகுப்புத் தொடர்பில் அத்தகைய காப்புறுதியாளர் அல்லது தரகர், இச்சட்டத்தின்கீழ் சபையிடமிருந்து விடயத்திற்கேற்ப உரிமமொன்றை அல்லது பதிவொன்றைப் பெற்றுள்ளரோ அந்த வகுப்பைச் சேர்ந்த காப்புறுதித் தொழிலைத் தவிர்ந்த ஏதேனும் காப்புறுதித் தொழிலை சபையின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி கொண்டு நடாத்துதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**45.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் ''கையேற்றல்களும் ஒன்றிணைப்புகளும் எனும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவு வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, ஏற்புடைத்தானவிடத்தெல் லாம், 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங் கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கையேற்றல்களும் ஒன்றிணைப்புகளும் தொடர்பிலான விதிகளுக் கிணங்கச் செய்யப்படுதல் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**46.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் ''அவர்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''அத்தகைய காப்புறுதியாளர்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 114 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**47.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 114 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) ''காப்புறுதி முகவர்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் ''தனியாள் ஒருவர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆளொருவர்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) ''காப்புறுதியாளர்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் ''பதிவுசெய்யப்பட்ட கம்பெனி'' என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, ''பதிவு செய்யப்பட்ட ஆள்'' என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும் ;

(3) ''உரிமம்பெற்ற வர்த்தக வங்கி'' என்ற சொல்லமைப் பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் ;

''உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை'' என்பது, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவரித்தனை ஆணைக் குழுச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒரு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனை என்று பொருள்படும் ;

(4) ''உள்ளூர் அதிகாரசபைப் பிணைப்பொறுப்பு'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் ;

"நட்டம் சீராக்குநர்'' என்பது, காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளினின்றெழும் நட்டங்களை நுண்ணாய்வு செய்வதிலும் கணிப்பீடு செய்வதிலும் தனித்துவமான அறிவையுடையவரும் மற்றும் இச்சட்டத்தின் ஏற்பாடு களின்கீழ் நட்டம் சீராக்குநர் ஒருவராகப் பதிவு செய் யப்பட்டவருமான ஆளொருவர் என்று பொருள்படும்;

(5) ''கம்பெனிகள் பதிவாளர்'' என்னும் சொல்லமைப் பின் வரைவிலக்கணத்தை நீக்கஞ்செய்து பின்வரும் வரைவிலக்கணத்தை அதற்காகப் பதிலீடு செய்வதன் மூலமும் :-

''கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி'' என்பது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 471 ஆம் பிரிவின்கீழ் கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியாகவிருக்கவென அல்லது செயலாற்றவெனப் பெயர்குறித்து அல் லது பதவிகுறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் பிரதிப் பதிவாளர் தலைமையதிபதியை அல்லது உதவிப் பதிவாளர் தலைமையதிபதியை உள்ளடக்கும் ; அத்துடன்

(6) "இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழு'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத் தில், அவ்வரைவிலக்கணத்தில் ''பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு'' என்னும் அச்சொற்கள் காணப் படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**48**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை அவ்வட்ட வணையை முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையாக மீளவிலக்கமிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத் திற்கான அட்ட வணையைத் திருத்துதல்.*

**49**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையின் முடிவில் பின்வரும் புதிய அட்டவணை இத்தால் சேர்க்கப் படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையாகக் கருதப்படுதலும் வேண்டும் :

*முதன்மைச் சட்டவாக்கத்திற் குப் புதிய அட்டவணை யொன்றைச் சேர்த்தல்.*

**"இரண்டாம் அட்டவணை"**

காப்புறுதியாளர் ஒருவரின் பணிப்பாளர் ஒருவராக இருப்பதற்கான தகைமையீனங்கள்
[பிரிவு 31அ]

ஆளொருவர் -

(அ) கல்விசார் அல்லது உயர்தொழில்சார் தகைமைகளைக் கொண்டிராவிடில் அல்லது காப்புறுதி, நிதி, வியாபாரம் ஆகிய துறைகளில் அல்லது வேறு ஏதேனும் இயைபான துறைகளில் பயனுறுதியுள்ள அனுபவத்தைக் கொண்டிராவிடில் ;

(ஆ) காப்புறுதியாளரின் பணிப்பாளரொருவராக நியமிக்கப்படுவதற்கு, தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஏதேனும் நேரத்தில் மூன்று ஆண்டு காலப்பகுதியின்போது சபையின் ஓர் உறுப்பினராக அல்லது ஒரு தொழிலாளியாகச் சேவையாற்றியிருந்தால் ;

(இ) நிதி முகாமைத்துவம் தொடர்பில் புரியப்பட்ட குற்றச்செயல் ஒன்றுக்கு அல்லது ஒழுக்கநெறி சம்பந்தப்பட்ட ஏதேனும் தவறுக்கு இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள தகுதிவாய்ந்த ஏதேனும் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால் ;

(ஈ) இலங்கையின் அல்லது வேறு ஏதேனும் நாட்டின் ஏதேனும் சட்டத்தின்கீழ் விடுவிக்கப்படாத கடனிறுக்கவகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டிருந்தால் ;

(உ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டின் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் கடனை மீளச் செலுத்துவது தொடர்பில் வழங்கப்பட்ட ஏதேனும் தீர்ப்பை அல்லது கட்டளையை நிறைவேற்றத் தவறியிருந்தால் ;

(ஊ) சித்த சுவாதீனமற்றவரென இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டின் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் வெளிப்படுத்தப்பட்டிருந்தால் ;

(எ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதேனும் காப்புறுதிக் கம்பெனியில், தரகரில், வங்கியில், நிதி நிறுவனத்தில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவில் ஒரு பணிப்பாளராக, பிரதம நிறைவேற்று அலுவலராக அல்லது வேறு ஏதேனும் அதிகாரப்பதவியில் சேவையாற்றுவதிலிருந்து, ஒழுங்குபடுத்தும் அல்லது கண்காணிப்பு அதிகாரசபையொன்றின் கட்டளையால் அகற்றப்பட்டிருந்தால் அல்லது இடைநிறுத்தப்பட்டிருந்தால் ; அல்லது

(ஏ) இலங்கையின் அல்லது இலங்கைக்கு வெளியே –

(i) ஒரு காப்புறுதிக் கம்பெனியாக அல்லது தரகராக அல்லது வங்கியாக அல்லது நிதி நிறுவனமாக

தொழிற்படுத்துவதற்கென வழங்கப்பட்ட எந்த காப்புறுதிக் கம்பெனியின், தரகரின், வங்கியின் நிதி நிறுவனத்தின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமம் அல்லது வேறு அதிகாரம் இடைநிறுத்தப்பட்டுள்ளதோ அல்லது இல்லாதொழிக்கப்பட்டுள்ளதோ ; அல்லது

(ii) எந்தக் காப்புறுதிக் கம்பெனி, தரகர், வங்கி, நிதி நிறுவனம் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு ஒடுக்கப்பட்டுள்ளதோ, அல்லது ஒடுக்கப்படுகின்றதோ அல்லது கட்டாயமாக குலைக்கப்பட்டு வருகின்றதோ, அந்த ஏதேனும் காப்புறுதிக் கம்பெனியில், தரகரில், வங்கியில், நிதி நிறுவனத்தில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவில் ஒரு பணிப்பாளராக, பிரதம நிறைவேற்று அலுவலராக, பிரதம அலுவலராக, குறித்துரைக்கப்பட்ட அலுவலராக இருந்திருப்பின் அல்லது வேறு ஏதேனும் அதிகாரப்பதவியை வகித்திருப்பின்,

அத்தகைய ஆள் காப்புறுதியாளர் ஒருவரின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு, தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலாகாது.

**50**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*பதிவு செய்யப் பட்ட தரகர் அத்தகைய தரகரின் கொளீ கம்பெனி யொன்றின் பணிப்பாளர் அல்லது பிரதம நிறைவேற்று அலுவலர் ஒருவரை காப்புறுதியாளர் ஒருவரின் பணிப்பாளர், பங்குதாரர் அல்லது ஊழியர் ஒருவராக வைத்திருத்தல்.*

**51.** இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று முதன்மைச் சட்டவாக்கத்தின் 82 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் தரகரின் கொளீ கம்பெனியொன்றின் பணிப்பாளர் அல்லது பிரதம நிறைவேற்று அலுவலர் ஒருவர் காப்புறுதியாளர் ஒருவரின் பணிப்பாளர் ஒருவராக அல்லது பங்குதாரர் ஒருவராக அல்லது ஊழியர் ஒருவராக இருக்குமிடத்து அப்போது முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவிற்கு இச்சட்டத்தின் 28 ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எவ்வாறிருப்பினும் சம்பந்தப்பட்ட பணிப்பாளருக்கு அல்லது பிரதம நிறைவேற்று அலுவலருக்கு வைத்திருக்கப்படும் பங்குகளைக் கையுதிர்ப்பதற்கு அல்லது விடயத்திற்கேற்ப அத்தகைய பணிப்பாண்மையை அல்லது தொழிலைத் துறப்பதற்கு இலங்கை காப்புறுதிச் சபை யால் நியாயமான காலப்பகுதியொன்று வழங்கப்படாமல் அத்த கைய தரகரின் பதிவு இடைநிறுத்தப்படுதலோ அல்லது அத்த கைய பதிவைப் புதுப்பிக்கப்படல் மறுக்கப்படுதலோ அல்லது இல்லாதொழிக்கப்படுதலோ ஆகாது.

*உரிமம் ஒன்றை வைத்திருக்கும் காப்புறுதி யாளர்கள் உரிமமளிக்கப் பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனை யொன்றில் நிரற்படுத்தப் படுதல்.*

**52.** (1) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட செல்லு படியான உரிமம் ஒன்றை வைத்திருக்கும் காப்புறுதியாளர் ஒவ்வொருவரும், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் இச்சட்டத்தின் 53 ஆம் பிரிவில் குறித் துரைக்கப்பட்ட பிரித்துவிடல் தேவைப்பாடுகளை, அவ்வாறு தேவைப்படுத்துமிடத்து, நிறைவேற்றியபின்னர் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம், இலக்க இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றில் அதனை நிரற்படுத்திக் கொள்ளுமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட வாறு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றில் நிரற்படுத்துகை யைப் பெற்றுக்கொண்ட பின்னர் உடனடியாக அந்நிகழ்வைப் பற்றி எழுத்திலான தொடர்பாடல்மூலம் இலங்கை காப்புறுதிச் சபைக்கு அறிவித்தல் காப்புறுதியாளர் ஒருவரின் கடமையாதல் வேண்டும்.

(3) காப்புறுதியாளர் ஒருவர் இப்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுதலானது, முதன்மைச் சட்டவாக்கத்தின் எவையேனும் ஏற்பாடுகளில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் அத்தகைய காப்புறுதியாளருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இடைநிறுத்துவதற்கான அல்லது இல்லாதொழிப்பதற்கான ஏதோவொன்றாகலாம்.

*காப்புறுதியாளர்கள் தங்களது நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதித் தொழிலை பிரித்துவிடல்.*

**53.** ஒரு காப்புறுதியாளர், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ், இலங்கைக் காப்புறுதிச் சபையால் வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமமொன்றின் நியதிகளின்படி நீண்ட தவணைக் காப்புறுதித் தொழில் அத்துடன் பொதுக் காப்புறுதித் தொழில் ஆகிய இரண்டையும் கொண்டு நடாத்துவதில் ஈடுபட்டிருக்குமிடத்து, அத்தகைய காப்புறுதியாளர் அதனால் கொண்டு நடாத்தப்படும் நீண்டகால காப்புறுதித் தொழிலையும் பொதுக் காப்புறுதித் தொழிலையும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து நான்கு ஆண்டுகளுக்குள் இரண்டு வெவ்வேறு கம்பெனிகளாகப் பிரிக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்